**செ. கு. எண்**:331 **நாள்**:11.09.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 11.9.2012

சென்னை, வியாசர்பாடி, அன்னை சத்தியா நகரைச் சேர்ந்த திரு. விஜயகுமார் என்பவரின் மகன் செல்வன் வி.சாமுவேல் 8.9.2012 அன்று அம்பேத்கர் கலைக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கையில் தண்ணீரில் விழுந்த பந்தை எடுக்க முயற்சித்த போது அருகிலிருந்த மின்கம்பத்தில் ஏற்பட்ட மின்சாரக் கசிவால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் காலமான செல்வன் சாமுவேல் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த செல்வன் வி. சாமுவேல் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**